www.Padasalai.Net www.CBSEtips.in

V10T

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022

வகுப்பு 10

தமிழ்

காலஅளவு : 3.00 மணி நேரம் மதிப்பெண்கள்: 100

பகுதி - I (மதிப்பெண்கள் - 15)

15×1=15

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது .............
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

2) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது .............
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

3) ''இங்கு நகரப் பேருந்து நிற்குமா?'' என்று வழிப்போக்கர் கேட்டது ............. வினா. ''அதோ, அங்கே நிற்கும்'' என்று மற்றொருவர் கூறியது ............. விடை.
அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் விடை ஆ) அறிவினா, மறை விடை
இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

4) 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

5) மலர்கள் தரையும் நழுவும். எப்போது?
அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

6) தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது .............
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

7) சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் .............
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

8) 'முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும். நீக்காவிட்டாலும் வாசனை தரும்' - என்ற புதிருக்கான விடையைத் தேர்க.
அ) புதுமை ஆ) காற்று இ) நறுமணம் ஈ) காடு

9) சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது .............
அ) அரசின் நலத்திட்டங்களை செயல்படுத்தல்
ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
இ) அறிவில் முன்னேற்றம்
ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

10) நம் இந்திய நாட்டு, நடுவண் முதன்மை அமைச்சராக இருந்த திரு. வாஜ்பாய் அவர்களின் கைகளால் 'பெண் ஆற்றல் விருது' பெற்றவர் .............
அ) ராஜம் கிருஷ்ணன் ஆ) பால சரஸ்வதி
இ) எம்.எஸ். சுப்புலட்சுமி ஈ) சின்னப்பிள்ளை

11) ''சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்''
- என்று பாடியவர்
அ) கண்ணதாசன் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) கவிமணி

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

''அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நாலும் ஆரிப்படுகர்''

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



12) பாடலின் ஆசிரியர் ............
அ) அதிவீரராம பாண்டியர் ஆ) குலசேகராழ்வார்
இ) பெருங்கௌசிகனார் ஈ) இளையான்குடி மாறநாயனார்

13) 'நாலும்' என்னும் சொல் தரும் பொருள் ............
அ) ஒலிக்கும் ஆ) தங்கி இ) பள்ளம ஈ) சுற்றம்

14) 'அசைஇ' என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு ............
அ) ஒற்றளபெடை ஆ) இன்னிசை அளபெடை
இ) செய்யுளிசை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

15) பாடலில் இடம்பெறும் அடிஎதுகை ............
அ) அன்று - கன்று ஆ) அன்று - அல்கி
இ) கன்று - கடும்பொடு ஈ) அலங்கு - ஆரிப்படுகர்

## பகுதி - II (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு - 1

**குறிப்பு: எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **4×2=8**

16) வசன கவிதை - குறிப்பு வரைக.

17) **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:**
அ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.
ஆ) திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழி.

18) வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

19) காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

20) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

21) 'அருமை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5×2=10**

22) **வல்லின ஒற்றை இட்டு எழுதுக:**
காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா? எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும்.

23) "பதிந்து" - **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

24) **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
அ) தான் - தாம் ஆ) விடு - வீடு

25) 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

26) **கலைச்சொற்கள் தருக:**
அ) Devotional literature ஆ) Humanism

27) காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும் - இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

28) **கலவைச் சொற்றொடராக மாற்றுக:**
கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

## பகுதி - III (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு - 1

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

29) இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

30) "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

31) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார். இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார் நச்செள்ளையார். பேகன் மறுமை நோக்கிக் கொடுக்காதவன் என்கிறார் பரணர். தன்னை நாடிவந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, தன் நாட்டை இழந்த துன்பத்தைவிடப் பெருந்துன்பம் எனக் குமணன் வருந்தியதாகப் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் யார்?

ஆ) ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு யாது?

இ) குமணன் எதற்காக வருந்தினான் என்று பெருந்தலைச்சாத்தனார் குறிப்பிட்டுள்ளார்?

## பிரிவு - 2

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **2×3=6**

32) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

33) மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

34) **அடிபிறழாமல் எழுதுக:**

அ) ''அருளைப் பெருக்கி'' - எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடல்.

**(அல்லது)**

ஆ) ''மாற்றம் ...........'' எனத் தொடங்கி 'அட்சய பாத்திரம்!' என முடியும் வரையுள்ள காலக்கணிதம் கண்ணதாசனின் பாடல்.

## பிரிவு - 3

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6**

35) நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், ''இலட்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்'' என்றார். ''இதோ சென்றுவிட்டேன்'' என்றவாறே அங்குச் சென்றேன்.

- இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.

36) தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

37) செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில் - **இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.**

## பகுதி - IV (மதிப்பெண்கள் - 25)

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5×5=25**

38) அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) **காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி** எழுதுக:

''கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!

- **கண்ணதாசன்**

39) அ) மாநில அளவில் நடைபெற்ற ''மரம் இயற்கையின் வரம்'' எனும் **தலைப்பிலான** கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற **தோழனை** வாழ்த்தி மடல் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் பள்ளியில் நடைபெறும் 'நாட்டு நலப்பணித்திட்ட **முகாமின்**' தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



41) மேல்நிலை வகுப்பில் சேர 'அருள்பாண்டி' என்ற மாணவன் விண்ணப்பிக்கிறார். அவர் 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழ் - 98, ஆங்கிலம் 85, கணிதம் - 95, அறிவியல் - 96, சமூக அறிவியல் - 97 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றுள்ளார். மொத்த மதிப்பெண்களைக் கணக்கிட்டு படிவத்தை நிரப்புக. தேர்வர்கள் தங்களை 'அருள்பாண்டி' என்ற மாணவனாகக் கருதிக் கொள்ளவும்.

42) அ) தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி; திறன் பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை; காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்; எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி. இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள்! இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக. **(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க:**

**Koothu:**

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient Puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright make-up. Koothu is very popular among rural areas.

## பகுதி - V (மதிப்பெண்கள் - 24)

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3×8=24**

43) அ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

**(அல்லது)**

ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

44) அ) "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45) அ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி, அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக:**

முன்னுரை - அரசுப் பொருட்காட்சி அறிவிப்பு - அமைவிடம் - நிகழ்த்தப் பெற்ற நிகழ்கலைகள் - அங்காடிகள் - பல்துறைக் காட்சிக்கூடங்கள் - பொழுதுபோக்கு விளையாட்டுகள் - பலவித உணவுகள் - பெருமித உணர்வு - முடிவுரை.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com